## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.55/2023

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10 வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஜனவரி மாதம் 6 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முனிரத்தினம் | மதம் | : இந்து |
| த/பெ | : கோவிந்த மந்தடி | ஜாதி | : -- |
| வயது | : 75 | கிராமம் | : அருங்குளம் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

06.01.2025

**வா.சா. 1 ன் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கில் 1ம் வாதி ஆவேன். வாதி தரப்பு 1ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் பிரமாண வாக்குமூலத்தை தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்குத் தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 23.01.1969 ம் தேதியிட்டு துரைசாமி மந்தடி என் அப்பா கோவிந்த மந்தடிக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன்.**(கிரைய ஆவணம் வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 23.01.1969 ம் தேதியிட்டு துரைசாமி மந்தடி வகையறா சஞ்சீவி மந்தடிக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2. 27.07.1988 ம் தேதியிட்டு எனக்கு சஞ்சீவி மந்தடி வகையறா எழுதி கொடுத்த கிரைய ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன்.**(கிரைய ஆவணம் வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 26.08.2015 ம் தேதியிட்டு என் தாயார் மங்கம்மாள் மற்றும் என் தங்கை ராஜேஷ்வரி எனக்கு எழுதி கொடுத்த

செட்டில்மெண்ட் ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன்.**(செட்டில்மெண்ட் ஆவணம் வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 16.03.2014 ம் தேதியிட்டு 2, 3 வாதிகள் பெயரில் உள்ள செட்டில்மெண்ட் ஆவணம் இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன்.**(செட்டில்மெண்ட் ஆவணம் வா.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** கனகம்மா சத்திர காவல் நிலையத்தில் 25.11.2023 ம் தேதியிட்டு கொடுக்கப்பட்ட மனு ரசீது அசல் தாக்கல் செய்கிறேன்.**(மனு ரசீது வா.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பட்டா எண்.2544 ல் 2, 3 வாதிகள் பெயரில் உள்ள கணினி கூட்டு பட்டா இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(கூட்டு பட்டா வா.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பிராதுப்படி தீர்ப்பு செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

(குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)